# தமிழ் ஆழி

தொகுப்பாசிரியர்

முனைவர் ம.சித்ரகலா

தமிழ்த்துறை

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி

பொள்ளாச்சி.

# தமிழ் ஆழி

முனைவர் க. தனலட்சுமி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி.

8)42

தொகுப்பாசிரியர்

முனைவர் ம. சித்ரகலா

தமிழ்த்துறை

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி

பொள்ளாச்சி.

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை– 600 050.

☎: 044 - 26251968, 26258410, 48601884

Language: Tamil

**Tamil Azhi**

Compiled by: Dr. M. Chitrakala

Tamil Department

Nallamuthu Gounder Mahalingam College Pollachi.

First Edition : September, 2020

Copyright : Publisher

No.of Pages : 228

Publisher:

**New Century Book House Pvt. Ltd.,**

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 050.

Tamilnadu State, India.

Email: info@ncbh.in

Online: www.ncbhpublisher.in

ISBN: 978 - 81 - 234 - 4010 - 1

Code No. A 4363

**₹ 300/-**

**Branches**

**Ambattur (H.O.)** 044- 26359906, **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Tanjore** 04362-231371 **Tirunelveli** 0462-4210990, 2323990 **Madurai** 0452-2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 04343-234387 **Ooty** 0423-2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Nagercoil** 04652-234990

**தமிழ் ஆழி**

தொகுப்பாசிரியர்: முனைவர் ம. சித்ரகலா

தமிழ்த்துறை

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி

முதல் பதிப்பு : செப்டம்பர், 2020

அச்சிட்டோர்: பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,

16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14

**☎: 044 - 28482441**

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

## III. உரைநடை


1. பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்களில் மானுட வாழ்வியல் சிந்தனைகள் — 4
   - முனைவர் பொ.மா.பழனிசாமி
2. அரசியற் சுதந்திரமும், இலங்கையின் கல்வி வளர்ச்சியும் — 5
   - திலானி (இலங்கை)
3. சங்க இலக்கியத்தில் தொழில்முறைகள் — 5
   - முனைவர் இரா.விஷ்ணுப்ரியா
4. கவிதை வடிக்கும் கவிதைகள் — 6
   - முனைவர் ப.வடிவேல்
5. உலகநாதன் ஓதுவித்த வாசகம் — 7
   - முனைவர் க.தனலட்சுமி
6. சிலப்பதிகாரத்தில் செவ்வியல் பண்புகள் — 7
   - முனைவர் ம.சித்ரகலா
7. சேக்கிழாரின் பெயர் சுட்டாப் பெண்கள் — 8
   - முனைவர் ஆ.மகாலட்சுமி
8. தூது செல்லாயோ கிளியே! — 9
   - முனைவர் பே.மகேஸ்வரி
9. நாட்டுப்புறவியலில் தொழில்சார் கலைகள் — 10
   - பேரா ர.சூர்யா
10. கவிஞர் சிற்பியின் தும்பைப் பூ மனிதர்கள் — 11
   - முனைவர் க.நஞ்சையன்


## IV. இலக்கிய வரலாறு


1. தமிழில் காப்பியங்களும் புராணங்களும் — 11
2. இரட்டைக் காப்பியங்களில் பெயர்ப் பொருத்தம் — 13


## V. படைப்பாக்கம்


1. புதினம் - சீத்தம்மா (நாவல்) — 13
   ஆசிரியர் - பட்சி
2. விளம்பரம் தயாரித்தல் - செய்தி எழுதுதல்

## 8. தூது செல்லாயோ கிளியே!

- முனைவர் பே. மகேஸ்வரி

### தூது இலக்கியம்

பெருங்காப்பியம் பாடும் மரபு அருகிய காலத்தில் தமிழ் இலக்கிய உலகில் பள்ளு, கலம்பகம், உலா, பரணி, கோவை, பிள்ளைத்தமிழ் எனப் பல சிற்றிலக்கியங்கள் புலவர் பெருமக்களால் படைக்கப்பட்டது. அவற்றில் ஒன்றே தூது இலக்கியமாகும். மிகப் பழங்காலத்தில் அரசியல் காரணங்களுக்காகவும், நட்பை விரும்பியுமே தூதுப்பாடல்கள் பாடப்பெற்றன. இராமாயணத்தில் அனுமன், அங்கதன் ஆகியோர் தூது சென்றது பற்றியும், மகாபாரதத்தில் கண்ணன், உலூகன் போன்றவர் சென்ற தூதுபற்றியும் குறிப்புக்கள் உள்ளன.

### தூது இலக்கணம்

"இலக்கண விளக்கம்" என்னும் நூலின் நூற்பா தூதின் இலக்கணத்தை,

"பயில் தரும் கலி வெண்பா வினாலே
உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும்
சந்தியின் விடுதல் முந்துறு தூது எனப்
பாட்டியல் புலவர் நாட்டினர் தெளிந்தே."

என்று பாடப்பட்டுள்ளது.

மேலும், தூது விடுத்தற்குரிய பொருள்கள் எவையெவை என்பதை 'இரத்தினச் சுருக்கம்' என்னும் நூல்,

"இயம்புகின்ற காலத்து எகினம் மயில் கிள்ளை
பயன்பெறு மேகம் பூவை பாங்கி - நயந்த குயில்
பேதை நெஞ்சம் தென்றல் பிரமரம் ஈரைந்தும்
தூதுரைத்து வாங்கும் தொடை."

என்னும் பாடலில் எகினம் என்று சொல்லப்படுகின்ற மயில் முதல் வண்டு வரை பத்துப் பொருள்கள் தூது விடுதற்குரியது என்று கூறப்பட்டுள்ளது.

### தூதிற்குரிய காரணங்கள்

அரசன் ஒருவன் மற்றோர் அரசனுக்கு ஒருவர் வாயிலாகச் செய்தியைச் சொல்லியனுப்புவது பழங்காலம் முதல் இருந்து வந்த பழக்கம் ஆகும். போர் முதலான காரணங்களுக்காக அரசர்களிடம் இருந்து வந்த இந்தப் பழக்கம் இலக்கியத்தில் கற்பனையாக அமையும்போது சிலவகை வடிவம் பெற்றது. பேசாத பறவைகளையும், விலங்குகளையும், உயிர் இல்லாத மேகம், காற்று முதலியவற்றையும் தூது அனுப்புவதாகக் கற்பனை செய்து பாடுவது அகப் பாட்டுக்களில் மிகுதியாக உள்ளது. இவ்வாறு காதல்

துறையில் அமைந்த பாட்டுக்களை ஒட்டிப் பிற்காலத்துப் பக்தி இலக்கியத்திலும் கடவுளிடம் தூது அனுப்பும் முறையில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் பல பாடல்கள் பாடியுள்ளனர். தேவாரத்திலும் திருவாசகத்திலும் நாலாயிர திவ்யப் பிரபந்தத்திலும் உள்ள அந்தத் தூதுப் பாடல்கள் பக்திச்சுவை நிரம்பி உருக்கமாக அமைந்துள்ளன. குயில், அன்றில், புறா, வண்டு, கிளி, நாரை முதலிய பறவைகள் பக்தர்களின் தூதுபற்றிய கற்பனைக்குப் பயன்பட்டுள்ளன.

நாயகி நாயகக் காதலைப் பக்திப் பாடல்களுக்கு உரிய வடிவில் பாடிய ஆழ்வார்களும் நாயன்மார்களும் தூது என்னும் வகையை நன்கு பயன்படுத்தி நெஞ்சை உருக்கும் பாடல்கள் பலவற்றை அளித்திருக்கிறார்கள். பெரிய காவியங்களிலும் காதலர்கள் தூது அனுப்புவதாகப் பாடும் பகுதிகள் உள்ளன. உமாபதி சிவாச்சாரியார் என்னும் சைவ சமயத்துச் சான்றோர் தம் நெஞ்சையே தூது அனுப்புவதாகப் பாடியது தனி நூலாகவே அமைந்துவிட்டது. அதற்குப் பிறகு தூது என்னும் பெயரால் விரிவான நூல்கள் இயற்றுவது வழக்கமாகிவிட்டது.

தூது ஒருவகை இலக்கியமாக வளர்ந்துவிட்டது. தூது அனுப்புவதற்குக் கற்பனை செய்யப்படும் பொருள்களும் வெவ்வேறாகப் பெருகிவிட்டன. பணம், நெல், துகில், புகையிலை, மான், காக்கை, தமிழ் முதலியவற்றைத் தூது அனுப்புவதாகப் புலவர் பலர் கற்பனைகள் செய்து நூல்கள் இயற்றியுள்ளனர். ஒவ்வொரு பொருளையும் அதற்குரிய சிறப்புக்களையும் மற்றவற்றிற்கு இல்லாத ஆற்றலையும் எடுத்துக் கூறி கற்பனை செய்வதால் ஒவ்வொரு தூது நூலும் ஒவ்வொரு வகையில் அழகாக அமையும்.

தூது இலக்கியங்கள் பெரும்பாலும் பேரின்பக் காதல் பற்றியே பாடுகின்றன. வீதியில் உலா வருகின்ற கடவுளைக் கண்டு விரும்பிய தலைவி, அவ்விறைவனிடம் தூது அனுப்புகிறாள் என்றே இந்நூல்கள் பெரும்பான்மையும் குறிப்பிடுகின்றன. இந்நூல்கள் 'கடவுள் மாட்டு மானிடப் பெண்கள் நயந்த பக்கம்' என்னும் புறத்துறையைச் சேர்ந்தவையே. தூது இலக்கியங்களில் தூதுவன் பெருமை, தலைவியின் உள்ளம் கவர்ந்த தலைவனின் சிறப்புகள், தூதுவன் செல்ல வேண்டிய வழி தலைவனைக் காணும் வேளை, சொல்ல வேண்டிய தூதுச் செய்தி ஆகியவை நிரல்பட அழகுடன் வருணிக்கப்படுகின்றன.

## அழகர் கிள்ளை விடு தூது

15-ஆம் நூற்றாண்டில் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பாடிய நூலே அழகர் கிள்ளைவிடு தூது. இது 239 கண்ணிகளைக் கொண்டதாகும். வடமொழியில் கிளித் தூது நூல்கள் பல உள்ளனவேனும், தமிழில் உள்ள பழமையான, சிறந்த கிளி விடு தூது இந்நூலே. இந்நூலாசிரியர் சைவ சமயத்தைச் சார்ந்தவராயினும் அழகர் பற்றிய கிள்ளை விடு தூது பாடியிருப்பதால் இவரது சமயப்பொறை உணர்வு புலப்படுகிறது. கிளி ஓரளவு பேசக் கற்றுக் கொண்ட பறவையாகும். திருமாலிருஞ் சோலை மலையில் கோயில் கொண்ட அழகரிடம் உள்ளத்தைப் பறிகொடுத்த பெண் ஒருத்தி தன் காதலை அவரிடம் தெரிவித்து அவர் தன் காதலை ஏற்றதன் அடையாளமாக மாலை ஒன்று வாங்கி வருமாறு கிளியைத் தூது விடுப்பதாகப் பாடப் பெற்ற நூல் அழகர் கிள்ளை விடு தூது.

## கிளியின் சிறப்புக்கள்

கரிய நிறம் கொண்ட திருமால் என்னும் தெய்வத்தின் 'அரி' என்னும் பெயரைக் கொண்டு, அத்திருமால் நீரின் மேல் விரித்துப் படுத்திருக்கும் பாயான ஆலிலையின் பச்சை நிறத்தைத் தன் திருமேனி நிறமாகக் கொண்டு, முல்லை, அசோகு, நீலம், மா, தாமரை என்னும் ஐந்து மலரம்புகளை வைத்திருக்கும் மன்மதனைச் சுமந்து சென்று உலகோர்க்கு இன்பம் அளிக்கும் கிளி அரசே! என விளிக்கிறாள் தலைவி.

"கார் கொண்ட மேனிக் கடவுள் பெயர் கொண்டு
நீர் கொண்ட பாயல் நிறம் கொண்டு - சீர்கொண்ட
வையம் படைக்கும் மதனையும் மேல் கொண்டு இன்பம்
செய்யும் கிளி அரசே!"

என்றும், சூரியனின் பச்சைக் குதிரையே! வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை, (நீலம்) என்னும் ஐந்து வண்ணங்களில் பசுமை நிறத்தை மட்டும் முதன்மையாகக் கொண்ட பார்வதியோ! வீரத்தை முதன்மையாகக் கொண்ட தத்தை (வீரம்) அழகான ஆபரணங்களைக் கொண்டு விளங்குவதால் கீரம் என்ற பெயரும், உயர் குணம் கொண்டோரின் வாழ்வின் முடிவில் சென்றடையும் பேரின்பத்தைக் கொடுப்பதனால் சுகவனம் என்றும், அலகில் சிவப்பும் உடலில் பசுமையும் என இரு நிறங்கள் கொண்டு விளங்குவதால் மனித உருவும் பறவை உருவும் என இருவடிவு கொண்ட எங்கள் பெரிய திருவடிகள் ஆகிய கருடனின் சிறப்புக்களை எல்லாம் பெற்றுள்ளாய் என்பதை,

"இருவடிவு கொண்டமையால் எங்கள் பெரிய
திருவடிகள் வீறு எல்லாம் சேர்வாய்."

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"தத்தை அடைந்தவர் ஏதத்தை அடையார் என்னும்
வித்தை அடைந்தாய் உனையார் மெச்சவல்லார் - முத்தமிழோர்

அறிவால் தகுதி பெற்ற கிளியைப் பெற்றிருப்பவர்கள் துயரை அடையார் என்னும் வித்தையைக் கற்றிருப்பதால் அதன் புகழைச் சொல்வன்மையால் விளக்கமுடியாது. முத்தமிழும் கற்ற பெரியோர் கிளியைப் பெருமை மிக்கதாகவே கருதுகின்றனர். எனவே நீயே உயர்ந்தது.

"நெய்யில் கை இட்டாலும் நீதான் பசுமையென்றே
கையிட்டுச் சுத்திகரிக்கலாம்."

ஊரறியச் சுடுநெய்யில் சுட்டாலும் அதன் பச்சை நிறம் மாறாது.

"ஐந்து பூதத்தில் ஒன்றே ஆனபடை நான்கில் ஒன்றே
முந்து முதலான பொருள் மூன்றில் ஒன்றே."

தூய்மையான விண், மண், வளி, ஒளி, நீர் எனும் ஐந்து பூதங்களில் ஒன்றான வன்னியே! அரசர்க்குரிய தேர், புரவி, யானை, காலாள் என்னும் நான்கு படைகளுள் ஒன்றான கிள்ளையே! அனைத்துக்கும் முதன்மையான அரி, அயன், அரன் ஆகிய பரம் பொருள்களில் ஒன்றானஅரி! முக்தி அளிக்கும் அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்திகை, துவாரகை ஆகிய ஏழு நகரங்களில் ஒன்றான அவந்திகையே! என்று கிளியின் சிறப்புக்கள் பேசப்படுகிறது.

### அழகர் சிறப்பும் பெருமையும்

சிங்க வடிவம் முதலில் தோன்றிய பின்னர் நரனாம் மனித வடிவமும் பெற்ற நரசிங்கமாக ஒரு பெரிய தூணின் உள்ளிருந்து வெளிப்பட்டு முதலில் அரியான திருமாலாகவும், பின் அரனான சிவனாகவும் பிறந்தார் என்பதை,

"அரிவடிவுமாய்ப் பின்னரன் வடிவுமாகிப்
பெரியது ஒரு தூணில் பிறந்து" -

என்ற பிறப்பின் பெருமையையும்,

கரிய நிறமும், மலை போன்ற அகன்ற தோள்களும் உடைய அசுரனாகிய இரணியனி வலிமை நிறைந்த உடலைத் தரையில் தேய்த்து அழித்து, அவன் போரில் ஈடுபடுத்தி சேனைகளை எமனுக்கு உணவாக்கியவன். சிவனாக வடிவெடுத்து, அவனுடைய அழித்த தொழிலையும் தானே செய்து, பின்னர் அவ்வழித்தற் தொழிலுக்குப் பகையான தொழிலா புவியைக் காத்தலையும் செய்து பிரபஞ்சம் முடியும் ஊழிக்காலத்தில் உண்ண வேண்டி முறைப்படி அடக்கிக் கொண்டு அருள் புரிந்தார் என்பதை,

"பன்னும் தொழிலைப் பகைத்து நிலக்காப்பும் அணிந்து
உண்ணும் படி எல்லாம் உண்டு அருள்" ...

என்னும் அடிகளில் விளக்கப்படுகிறது.

வெண்ணெயும், பூதனை என்ற அரக்கி கொடுத்த பாலும் போதாமல், மேலும் ப கொண்டு, வேதங்களைப் படைத்த பிரம்மனைப் பெற்று அண்ட வெளியெங்கு விரிந்து பரந்து நின்று, மருதமரத்தைச் சாய்த்து வீழ்த்துமாறு நடந்தும் தவழ்ந்து விளையாடுபவன். குழந்தைத் தன்மை நீங்காத இயல்புடையவன். ஆம், அழகர்,

"பூதனை தந்த பால் போதாமலே பசித்து
வேதனையும் பெற்று வெளிநின்று - பாதவத்தை
... ... ... ... ... ... ... ... ...
தன்னுறநடை இட்டுத் தவழ்ந்து விளையாடும்
பிள்ளைமை நீங்காத பெற்றியான்."

கடையூழிக் காலத்தில் பிரபஞ்சங்களை அழிக்கும் கடல் நீர்ப்பரப்பின் மேல் ஆலிலைப் மிதப்பவன். ஒவ்வொருவர் உள்ளத்தின் உள்ளும் இருப்பவன். எனினும் இவ்வுலகிற்கு அப்பாற்பட்டவன். தெளிவாக வெறுமையான வெட்டவெளியில் இருந்தாலு யாருக்கும் புலனாகாதவன். அனைவர்க்கும் மிக அருகிலிருந்தும் அடைய முடியாதவ உயிர்களை நெருங்கி விதியை எழுதும் பிரமனும் நானே, அப்பிரமன் படைத் நிலைபேறுடைய உயிர்களும் நானே, அப்பிரமனையும், உயிர்களையும் ஏவி தொழில்கள நடத்துபவனும் அவனே.

"மாவும் நான் மன்னுயிரும் நான் அவ்விருவரையும்
ஏவுவான் தான்!

பொங்கும் அலை மோதும் திருப்பாற்கடலில் அறிதுயில் புரியும் பரம்பொருள். முன் முதல வாயில் சிக்கிய போது தன்னைக் காத்த ஆதிமூலம் இவனே எனச் சான்றுரைக்கு யானையைக் கொண்ட திருமால், செந்தாமரை மலரிலிருந்து தேன் பொழிவது போ உலகமளந்தபோது பிரமலோகத்தில் பிரமன் பூசித்த நீர் தன் பாதத்திலிருந்து கங்கைய வழியச் செய்த வள்ளல்.

"செந்தாமரை மலரின் சிந்திய தேன் போல
மந்தாகினி வழியும் வன்மையான்."

"தெள்ளு மணிவாயில் காட்டிச் செகம் புறமும்
உள்ளும் இருப்பது உணர்வித்தோன்" - தன்னை

ஈன்ற தாயாகிய யசோதைக்குத் தன் அழகிய திருவாயைத் திறந்து காட்டி உலகம் வெளியி இருப்பது போலவே தனக்குள்ளும் இருக்கிறது எனத் தெளிவாக உணர வைத்தவன்.

தன் உடம்புள் ஓர் ஒளிக்கதிராக என்னையும் சேர்த்துக் கொள்வதற்காகப் ப நிறங்களையெல்லாம் தனக்குள்ளே அடக்கிக் கொண்டாலும், தான் நீல நிறமாக இருக்கும் நீல மணியின் நிறத்தைக் கொண்டவன்.

"என் பிறவி எண்பத்து நான்கு நூறாயிரமும்
தன் பிறவி பத்தால் தணிந்திடுவோன்" -

தானே எனக்குப் படைத்த எறும்பு முதல் யானை ஈறான எண்பத்தி நான்கு இலட்சம் பிறவிகளையும் தன் பத்து அவதாரங்களால் தீர்த்தருளிய பெருமைக்கு உரியவன்.

**இறைவனின் தசாங்கம் உரைத்தல்**

*1. **அழகர் மலை:*** எதிரே நின்று புகழ்ந்து துதிக்கும் பிரமனும் சிவபெருமானும் ஆகிய இருவரும் அருள் வேண்டி என்றும் நீங்காதிருக்க **கேசவாத்திரி** என்னும் அழகிய பெயரும், வலிய உடம்பை அடைகின்ற கூட்டமாக பிறவித் தளைகளை அழித்தலால் **சிங்காத்திரி** என்னும் சிறந்த பெயரும், யாவரும் பார்க்கக் காட்சி அளித்தலால் **இடபகிரி** என்னும் பெயரையும் உடையது.

**2. சிலம்பாறு:** என்றும் வற்றாது பொன்மலையாகிய மேரு மலையில் இருந்து வழிந்தோடும் **சாம்புநதம்** - திருமாலின் திருவடியில் அணியும் சிலம்பு போல காட்சியளித்தலால் சிலம்பாறு எனப்படுகிறது.

**3. தென்பாண்டி நாடு:** புனல் நாடாகிய சோழநாடும், தென்நாடாகிய பாண்டிய நாடும் பூமித்தாயின் இரு கண்களாக விளங்கும் அவற்றுள் அருள் நிறைந்த வலக்கண் தென்பாண்டி நாடு.

**4. திருமாலிருஞ் சோலை:** மனத்தில் நிறையும் வளம் கொண்ட அமராவதி நகரைப் போன்ற, பெருஞ்சிறப்புக் கொண்ட திருமாலிருஞ்சோலை என்னும் தெய்வீகமான ஊர்.

**5. துளசி மாலை:** மார்பில் அணிந்துள்ள அடியவர்களால் நினைத்து துதிக்கப் பெறுகின்ற, பல பொன், வைர அணிகலன்களுடன் கலந்து வானவில்லைப்போல் காட்சி அளிக்கிற பச்சை வண்ணத்தையே மிகுதியாகக் காட்டுகின்ற துளசி மாலையை அணிந்தவன்.

**6. அத்வைதம் எனும் யானை:** மோகம் அழியும் வரை உயிர்களை விடாது கட்டி வைக்கின்ற வடகலை, தென்கலை என்னும் இரு வைணவ மதப் பிரிவுகளை யானை கட்டும் கயிறாகவும் கொண்டு, என்றும் நீங்காத பேரின்ப மயமான இறைவனின் மலர்ப்பாதங்களைக் கண்டுணர்ந்த அத்வைதம் என்ற மதயானையை உடையவன்.

**7. வேதப்புரவி:** தன் கால்கள், வாய், வால் ஆகிய ஆறு உறுப்புகளையும் போருக்கான தன் அங்கங்களாகக் கொண்டு முன்னணிப் படையாகப் போற்றப்படும் வேதக்குதிரையை உடையவன்.

**8. கருடக்கொடி:** அமுதம் கடையப் பயன்பட்ட வாசுகி பாம்பு, துயில் கொள்ளப் பயன்படும் ஆதிசேடன் ஆகிய மிகப்பெரிய பாம்புகள் விழ அவற்றைப் பற்றிக் கொள்ளும் பெரு வலிமையுடையவனான கருடனைத் தன் கொடியில் கொண்டவன்.

**9. மும்முரசு:** சூழ்ந்த தன் அழகர் மலையில் சிங்கமும், யானையும், மேகமும் நின்று முழங்கும் ஓசையைத் தன் கோயிலின் முற்றத்தில் அதிர்கின்ற வீரமுரசு, நியாய முரசு, கொடை முரசு என்னும் மூன்று முரசுகளை உடையவன்.

**10. ஆணை:** என்றும் அவன் அசையாமல் ஓரணுவும் அசையாது என்று உலகம் கூறும் பழமொழியின்படி தவத்தால் நிலைபெற்ற ஆணையை உடையவன்.

### இறைவனின் உடல்

"செங்கதிரும் வெண்கதிரும் என்னத் திருவிழியும்
சங்கமும் சக்கரமும் தாங்கினோன்..."

சிவந்த கதிரவனும் வெண்ணிலவும் போன்ற இரு திருவிழிகளையும், சங்கு சக்கரங்களை உடையவன்.

### உலகும் இறைவனும்

அழகிய அகன்ற இடமுடைய உலகத்தை உண்ட கனி போன்ற வாயை உடையவ அவ்வுலகங்கள் அனைத்தும் தங்கி இருக்கும் திருவயிற்றை உடையவன், பிறவி தோறு தொடர்ந்து வரும் ஊழ்வினையை அடியோடு அறுக்கும் தன்னுடைய நாராயணா என் திருப்பெயரைச் சிந்தித்து உடலில் திருமண் தரித்துக் கொண்டவர்க்கு இம்மை, மறு இன்பங்களைத் தருபவன்.

### வழிபட்டவர்கள்

பலவித வடிவங்களில் தங்கள் இஷ்ட தெய்வங்களை மனிதர்கள் துதி புண்ணியமனைத்தும் தரும தேவதையாக ரிஷப வடிவம் எடுத்து அழகர் மலைக்கு வந் தன்னைப் பூசிக்க நின்றவர்களுக்கு சரணாகதி அடையத் தன் பாதத் தாமரைக அளித்தவன்.

### கோடைத் திருவிழா

திருவிழாவிற்குரிய நாட்களில், சந்தனச் சோலையின் ஊடே தவழ்ந்து வரும் தென் காற்று, மென்காற்றாக வீசி சோலையிலுள்ள மலர்களின் தேன் துளிகளைத் தெளிக்கி காலமே கோடைத் திருவிழா நடைபெறும் அழகர் மலை.

### மதுரை

இதழ் மலர்ந்த மலர்களால் ஆன மாலையை அணிந்த அழகர் எழுந்தருளிய திருநக மதுரை.

### தல்லாகுளம்

அடி அசைந்தபடி சென்று, கல் போன்று கடினமான உள்ளங்களும் கரைந்து உரு வண்ணம், பணிந்து நிற்போர் கண்முன், இருக்கும் ஊர் தல்லாகுளம்.

### வைகை

அருள் பெறும் கருத்துடன், தம் துயரை அறுத்துக்கொள்ள விரும்பி, வந்து வ கேட்கும் பக்தர்களுக்கெல்லாம் அவர்கள் கேட்ட வரங்கள் எல்லாவற்றையும் வழங்கும் ஊற்றுப் பெருக்கே வைகை ஆறு.

### வண்டியூர் மண்டபம்

இரவில் கைத் தீவட்டிகளும், வாண வேடிக்கைக் காட்சிகளும் பக்தர் கண்டுகளிக் தோன்ற, முன்னர் திருத்தண்கால் என ஊரில் ஒளித்தீப வடிவில் வரமருள வந்த அழ திருமகளுடன் மகிழ்வுடன் வீற்றிருந்த மண்டபமே வண்டியூர் மண்டபம்.

### தலைவி அழகரைக் காணல்

குற்றமற்ற தூயவனான திருமால் பாம்புப் படுக்கையுடையவன் என்று சொல்வதுன் உயிர்களின் தலைவனாகிய சிவபெருமானைப் போல இவன் யாசிக்கும் தொழ

செய்யாதவன் என்றும் சொல்வதுண்டு. இராமாவதாரத்தின்போது கடலில் சிறந்த அணையைக் கட்டியவன் என்று கூறுவது பொய், ஏனெனில் இன்று அவன் துயரக்கடலுக்கு அணையிடவில்லையே என தலைவி வருந்தினாள்.

### தலைவி அழகரிடம் தன் நிலை உரைத்தல்

"செங்கரத்தில் அன்று திருடிய வெண்ணெய் போலச்
சங்கு இருக்க என் சங்குதான் கொண்டீர் -"

மணமுள்ள, சிவந்த தங்கள் கையில் முன்னர் கண்ணனாய்ப் பிறந்தபோது திருடிய வெண்ணெயைப் போலச் சங்கு இருக்க, என் கைகளிலணிந்த சங்கு வளையல்களைக் கவர்ந்து கொண்டு விட்டீர்கள். இரவு யானையைப் போலக் கருமையாய் இருப்பதால் அதைக் கசேந்திரன் எனக்கருதி முன்னர் முதலை வாயிலிருந்து காத்து அருள் புரிந்திருப்பதால் விட்டு விட்டீர்கள். அந்த இரவு என்னும் யானை மேல் ஏறிவரும் பெரிய விண்மீனாகிய சந்திரனையும் அதனுடன் வரும் முதலையையும் இப்படி சும்மா விட்டு விடலாமா? விரகத்தால் வாடும் என்னை இரவும் நிலவும் வாட்டுகின்றனவே? அவற்றைத் தண்டிக்க மாட்டீரோ என வேண்டுகிறாள்.

### தேனூரில் இருந்தருளியபின் அழகர் சோலைமலை திரும்புதல்

சங்கு, சக்கரம், வாள், வில், கதை என்னும் ஐந்து ஆயுதங்களைக் கொண்ட அழகரிடம் என்னைத் தன் மனதில் ஏற்றுக்கொள்ளுமாறு நான் வேண்டி நிற்க, அவரோ தேனூர் மண்டபத்தைச் சார்ந்து அதனை வலம் வந்து, பழங்காலத்தில் விரசையாற்றங்கரையில் இருந்த வைகுந்தம் ஆகிய வீடு இதுவே என்று கூறும் சிறப்புடன் அமைந்த அத்தேனூர் மண்டபத்துள் புரசைக் கயிற்றால் கட்டப்பெற்ற கசேந்திரன் என்னும் மலையனைய யானையைக் காத்தவனாகிய அழகன் புகுந்தான் என்பதை,

"கொண்ட பஞ்சாயுதன் மேல் கொள்கை பெறத் தேனூர்
மண்டபம் சார்வாய் வலம் கொண்டு - பண்டை
விரசையுடன் வைகுந்த வீடும் இது என்னப்
புரசை மாலை காத்தோன் புகுந்தான்"

என்று அழகிய நற்பதியாகிய சோலை மலையைச் சென்றடைந்த அழகரின் சிறப்பு கூறப்படுகிறது.

### தலைவியின் காதல் வேதனை

வெள்ளில் கனி ஆனேன் வேதனை ஈன்றவன் தான்
உள்ளில் கனியானே ஊர்ந்து வரும் - பிள்ளைமதி

என்ற பாடலில் தலைவி நிலாவிடம் தன் வேதனையைத் தெரிவிக்கிறாள். நானோ யானை உண்ட விளாம்பழம் போல ஊரார் அறியாமல் உள்ளே நோய் கொண்டு உருகினேன். ஆனால், பிரமனைப் பெற்ற எனக்குத் துயரைத் தந்த அந்த அழகன் உள்ளம் கனியவில்லையே? வானில் ஊர்ந்து வரும் இளநிலவே!

### கிளியை வேண்டல்:

"என்கூடு பொன் கூடும் இந்த நிறத்தினால்
உன் கூடும் என் கூடும் ஒன்று காண்" -என்றும்
"ஈசன் திருநாமம் எல்லாம் என்போல் உனக்குப்
பாசம் தொலையப் பயிற்றுவேன் - பேசு என்றே."

கிளி அரசே! என் உடம்பிற்கு அழகு சேர்க்கும் இந்தப் பசலை நிறம் படர்ந்திருப்பதால் உன் உடம்பும் என் உடம்பும் ஒத்திருப்பதைப் பார். என்னிடம் அன்பால் கனிந்த மனம் உண்டு. உன் விருப்பமறிந்து வேண்டுவதை ஊட்டுவேன். உன் கூட்டில் உன்னை அரசனாக அமர்த்தி, ஆரத்தி எடுத்து குற்றமற்ற மணப் பொருட்களையும் புகைப்பேன், துளசி மாலையை அணிந்த இறைவனாகிய அழகரின் திருப்பெயர்களையெல்லாம் என்போல் நீயும் பேசக் கற்றுக் கொடுப்பேன்.

### பிறபொருட்கள் தூதுக்குப் பயன்படா என்றல்

தன் வலிமை குறைந்து போன வெண்மை நிறமுடைய அன்னப் பறவையைத் தூது அனுப்ப முடியாது. கூடுகட்டித் தன்னை அன்பாய் வளர்த்த காக்கையாகிய தாயாருக்கே உதவாத குயிலையும் அனுப்ப முடியாது. அரி என்று சொல்லத் தெரியாமல் மதுவில் மயங்கி அளி என்று சொல்லும் வண்டையும் அனுப்பமுடியாது. தென்றல் காற்றை அனுப்பலாம் என்றாலோ அது எமன் இருக்கும் தென் திசையில் உள்ளது. பெண்களை அனுப்பலாம் என்றால் என்னைப் பழி செய்வார்கள். தானே ஊழி முடிவில் உண்ணும் ஏழு உலகங்களையும் காக்கின்ற பெருங்கருணை கொண்ட நல்லவராகிய அழகரின் முன் எந்தக் கொடியவரையும் அனுப்ப முடியாது.

### கிளியே தகுதியானது

நீ செல்கின்ற வேளையில் அழகரின் அருகில் அடியவர்கள் இருந்தால் அவர்களுடன் சேர்ந்து கீர்த்தனைகள் பாடுவாய். எங்கிருந்து வந்தாய் என்று கேட்டால் திருமாலிருஞ் சோலையிலிருந்து வணங்க வந்தேன் என்பாய். முகம் சிவக்க, கடுகளவும் கோபம் வராவண்ணம் சொல்வாய். எனவே, என்னை வாட்டும் துயரை அழித்து கையில் சங்கைத் தாங்கி உள்ளவரும் உண்மை, அறிவு, இன்பம் ஆகியவற்றின் முழு வடிவானவரும் ஆகிய அழகர் அணிந்துள்ள தேன் துளிக்கும் மலர் மாலையை, அவர் என் காதலை ஏற்றதன் அடையாளமாக வாங்கிக் கொண்டு வருவாய்.

### இறைவன் இருக்குமிடத்தின் அடையாளம்

கிரேதாயுகத்தில் ஆலமரமாகவும், திரேதாயுகத்தில் அரசமரமாகவும், துவாபரயுகத்தில் வில்வமரமாகவும், கலியுகத்தில் புத்திர தீபம் என்னும் மரமாகவும் விளங்கிய தர்மம் இன்று தேவர்க்குரிய ஐந்து கற்பக மரங்களுக்குப் பிறகு வந்த ஆறாவது கற்பகமரமாகி இங்கு வந்து சக்தியை அளித்துக் கொண்டிருக்கிற மரம் ஒன்றுண்டு. நெருங்கிய கோடிக்கணக்கான சோலைகள் அங்கு உண்டு. கோடி ஆறுகளும் உண்டு. கோடிக்கணக்கில் அழகிய நீர்ச்சுனைகளும் உண்டு. திருமாலுக்குரிய வைணவ தர்மத்தைக் காக்கும் யோகர் போல இரவும் பகலும் உறங்காத புளியமரம் ஒன்றும் அங்கே உண்டு.

### அவையில் உள்ளோர்

அழகரின் மகனாகிய பிரமன், தேவர்களின் அரசன் இந்திரன், வீடணனுக்கு இலங்கை அரசை தானே வழங்கிய அழகரின் திருப்பாதங்களை நம்பிய அடியவர், சீரங்கராச பட்டர் என்னும் புகழ்பெற்ற அர்ச்சகர், திரிதண்டத்தை ஏந்திய முனிவரும், திருமாலிருஞ்சோலைச் சீயர் என உலகில் தன் புகழ் விளங்க இருக்கின்ற பெருந்தவ முனிவர், திருமலை ஆண்டானும், தோழப்பையங்கார் எனும் ஆச்சாரியர், பட்டர்களாகிய வேதபாரகர், அமுதார் என்னும் திருப்பணியாளர், திருமலை நம்பி, சோலை மலை நம்பி, திருமாலிருஞ் சோலைப் பிரியர் என்ற சிறந்த கோயில் கணக்கர், அழகர் மலையில் இருந்து உலகை ஆளும் கடவுளையே துணையாகக் கொண்டு என்றும் கோயில் திருப்பணி செய்கின்ற நாயகரும் உள்ளனர்.

## தூது உரைக்க வேண்டிய வேளை

அவையோர் தம் பாதங்களை வணங்க, ஆரவாரம் நிறைந்த அவையில் கொலு வீற்றிருப்பார். அப்போது நீ என் தூதுச் செய்தியை உரைத்தால் என் வார்த்தை அவர் செவிகளில் ஏறாது.

குடத்தில் பிறந்த அகத்தியரின் வாய்க்கு முன் கடலில் ஒளிந்து கொண்ட விருத்திராசுரனை வெளிவரச் செய்யும்படி இந்திரன் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கி, உள்ளங்கையில் ஏந்திக் கடலை உண்ண முற்பட்டபோது நுரையடங்கிக் குறுகிக் கடல் அடங்குமாறும், என்னை அதட்டிக் கட்டுப்படுத்தும், என் தாயின் சொற்கள் அடங்குமாறும், கிளியே நீ என் காதல் நிலை பற்றி அத்தலைவனிடம் உரைப்பாயாக!

## மாலையைக் கேள்

அன்புடன் எம் அனைவரின் தலைவராகிய திருமாலை நோக்கி அவர் தம் இரு தோள்களிலும் அணிந்து இருக்கும் பூமாலையை அவர் என் காதலை ஏற்றுக் கொண்டதன் அடையாளமாகத் தரும்படி கேள், "ஒருவேளை உங்களுடைய மாலையை நீங்கள் தந்து உதவவில்லை என்றாலும் எங்கள் அன்னையாகிய கோதை நாச்சியார் சூடிக் கொடுத்து, அதன் பிறகு நீங்கள் அணிய அளித்திட்ட, மலர்த்தாது நிறைந்த அவளுடைய தந்தை பெரியாழ்வார் கொடுத்த மாலையையேனும் தாருங்கள் என்று கேள்.

முறையுடன் தன்னை அடுத்து வந்து வேண்டி நிற்போர் அனைவருக்கும் தன் ஆடித்திருவிழாவின் போது கேட்கும் வரத்தை ஈந்தருளும் அழகன் நீ மாலையைக் கேட்டால் இல்லை என்று சொல்ல மாட்டார்கள். எவர் மனத்திலும் எழும் தடுப்பதற்கு அரிய மயக்கத்தை நீக்கும் அழகர் திருத்தோளில் அணிந்திருக்கும், மணம் நிறைந்த மலர் மாலையை நீ எனக்காக வாங்கி வா என கிளியை அழகரிடம் தூது அனுப்புகிறாள் தலைவி.

## முடிவுரை

கோடைத் திருவிழாவில் அழகர் உலாவரும் சிறப்பும், அழகர் மலை அழகும், தூது செல்லும் தகுதி கிளிக்கு மட்டுமே உண்டு என்றும், அழகர் இருக்கும் இடத்தையும், அவரைச் சந்திப்பதற்குரிய சமயத்தையும் கிளிக்கு உணர்த்தி, அந்த அழகரிடம் தன் காதலைத் தெரிவித்து அவருடைய மாலை ஒன்றை வாங்கி வருமாறு வேண்டிக் கொள்ளும் தலைவியின் பெருமையையும் கிளியின் சிறப்பும், அழகர் மலையின் சிறப்பையும் தெரிந்து கொள்ள இக்கட்டுரை வாய்ப்பாக அமைந்துள்ளது என்பதில் வியப்பில்லை.